மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள் 36/21

004040
4/10/2021

பிறப்பிப்பவர் : திரு.சா.சதீஸ்பாபு

ந.க.எண். 21855 /2020/ஊ.வ.–3

நாள் : 01.10.2021.

ஊராட்சி ஒன்றியம்
04 OCT 2021
மதுரை மேற்கு

பொருள் பொதுப்பணிகள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் 2018–19, மற்றும் 2019–20, ஆம் ஆண்டிற்கான தொகுதி–IV மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணியேற்பு செய்துள்ள நபருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்திட கருத்துரு வரப்பெற்றது – பணிவரன்முறை செய்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 2404 / PSD– 1 / 2020, நாள்.29.05.2020.
2. மதுரைமாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.21855/2020/ஊ.வ.3 நாள்.24.07.2020.
3. மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கடிதம் ந.க.எண்.36/2021/அ1, நாள்.30.04.2021.

*****

ஆணை:

பார்வை(1)–ல் காணும் சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியிடங்களுக்கு 2018 – 2019, மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான தொகுதி–IV (POSTS INCLUDED IN GROUP-IV SERVICES 2018 – 2019, and 2019–2020) நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு, பார்வை(2)–ல் காணும் செயல்முறைகளின்படி, மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் முற்றிலும் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்ட அட்டவணையில் காணும் அலுவலருக்கு தனியர் பணியேற்ற நாள்முதல் கீழ்க்காணும் நிபந்தனையுடன் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ எண் | தேர்வாளர்களது பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | பதவி மற்றும் பணி நியமனம் செய்யப்பட்ட அலுவலகம் | பணியேற்பு செய்த நாள். | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | T.S.விஷ்ணு. | ஊர்நல அலுவலர் நிலை–2, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம். | 03.08.2020 மு.ப | 03.08.2020 மு.ப |

நிபந்தனை

**" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment ot the post included in Combined Civil Services Examination-IV for the year 2018-19, and 2019 - 2020".**

000100

"இப்பணிவரன்முறை, 2018 - 2019, மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வுகள் தொகுதி IV -ல் அடங்கிய பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பாக சென்னை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை, உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டதாகும்."

மேற்காணும் அலுவலரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை குறித்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

இச்செயல்முறை ஆணைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பி வைக்குமாறு தொடர்புடைய அலுவலக கட்டுப்பாட்டுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்/-) சா சதீஸ்பாபு,
மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),
மதுரை.

/உ.ந.உ.ப/

அலுவலகமேலாளர்(வளர்ச்சி),
மதுரை.

பெறுநர்
தொடர்புடைய அலுவலர் – உரிய வழிமுறையாக
நகல்
1. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ / கி.ஊ)
மதுரை மேற்கு, ஊராட்சி ஒன்றியம், மதுரை.
2. ஊ.வ.3 – இருப்பு கோப்பிற்கு.

பெ.மு.ந.க.எண்: 36/2021/அ1

ந.பெ.உ.ஒ
நாள்: 05.10.2021

: தகவல் சார்பு செய்யப்படுகிறது:

BLOCK DEVELOPMENT OFFICER (BP)
MADURAI WEST

5/10/21

பெறுநர்: திரு. T.S. விஜய்
ஊராட்சி செயலர் ...

ந.பெ.உ.ஒ